TIST இந்தியா செய்திமடல் நவம்பர் 2025 விற்பனைக்கு இல்லை

# செழுமை

The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST என்பது விவசாயிகளால் வழிநடத்தப்படும் ஒரு புதுமையான மற்றும் நெடுங்கால ஆராயப்பட்ட காடு வளர்ப்புத் திட்டமாகும்

செழுமை செய்திமடலின் கடைசி சில இதழ்களைப் படிப்பதன் மூலம் நீங்கள் GHG ஒப்பந்தத்தின் ஆழமான நுண்ணறிவுகளைப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

மரம் நடுவதன் ஒரு முக்கிய அம்சத்தை இப்போது நாம் பாப்போம், குறிப்பாக கார்பன் சந்தைக்காக நீண்ட காலத்திற்கு மரங்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளில், அதே நேரத்தில் நமது நிலத்திலிருந்து உணவு, தீவனம் போன்றவை நமக்கு தேவைப்படுகிறது. இதற்கான தீர்வு வேளாண் காடுகள்.

**வேளாண் காடுகள் வளர்ப்பு பற்றிய அறிமுகம்**

வேளாண் காடுகள் வளர்ப்பு என்ற சொல், நிலம் பயிர்கள் மற்றும்/அல்லது கால்நடைகளுடன் மரங்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு அமைப்பைக் குறிக்கிறது.

வேளான் காடு, ஓரின பயிர் / மரம் வளர்ப்பை விட மிகவும் கலப்பு அமைப்பாகும். ஏனென்றால் இங்கு, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளுக்கு இடையில் தொடர்புகள் இருக்கின்றன. வேளான் காடுகளில், பல வெளியீடுகளின் உற்பத்தி உள்ளது மேலும் இங்கு **பல உள்ளூர் மரங்களை வளர்ப்பதில்** முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

எனவே, இது ஒரு நிலையான நில பயன்பாட்டு முறையாகும், இது **உணவுப் பயிர்களை** (ஆண்டுதோறும் விளையும் பயிர்கள்) **மரப் பயிர்களுடன்** (பல்லாண்டு வாழ்பவை) இணைப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கிறது. மேலும், மேலாண்மை நடைமுறைகள் மக்களின் சமூக மற்றும் கலாச்சார நடைமுறைகளுடன், அந்த நிலத்தின் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழலுக்கு பொருந்தும்.

வேளாண் காடுகளை செயல்பாட்டு அடிப்படையில் வகைப்படுத்தும்போது, உற்பத்தி அல்லது பாதுகாப்பு செயல்பாடுகள் என வகைப்படுத்துகிறோம் - முந்தையவற்றில் மரங்கள் உணவு, தீவனம், விறகு, உடை, தங்குமிடம், சிறு வன உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன, பிந்தையவற்றில் அவை காற்று தடுப்புகள், காப்பு மர வரிசை, மண் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக வளர்க்கப்படுகின்றன.

**TIST மதிப்புகள்** : TIST இல், எங்கள் எல்லா அணுகுமுறைகளிலும் இந்த மதிப்புகளைப் பின்பற்றுகிறோம் –

1. நாங்கள் நேர்மையானவர்கள்
2. நாங்கள் துல்லியமானவர்கள்
3. நாங்கள் வெளிப்படைத்தன்மையுடையவர்கள்
4. நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்பவர்கள்
5. நாங்கள் பரஸ்பரம் பொறுப்பாளிகள்
6. நாங்கள் குறைந்த தொகையில் பெரிய பலன்களை உருவாக்குகிறோம்

நமது TIST மரங்கள் ஒற்றைப் பயிர் சாகுபடி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சில மர இனங்களை மட்டும் நடுவதற்குப் பதிலாக வேளாண் காடு வளர்ப்பு என்ற கருத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

**சுற்றுச்சூழல் நன்மைகளில்** ஊட்டச்சத்துக்களை திறம்பட மறுசுழற்சி செய்தல், நீர் வெளியேறுதல் மற்றும் மண் அரிப்பைக் குறைத்தல், மைக்ரோக்ளைமேட்டை (நுட்ப காலநிலை) மேம்படுத்துதல், சரகுகள் சிதைவதால் மண் ஊட்டச்சத்து அதிகரித்தல் ஆகியவை அடங்கும். **பொருளாதார நன்மைகளில்** உணவு, விறகு, தீவனம், உரம், மரம் மற்றும் வருமானம் ஆகியவற்றின் அதிகரித்த மற்றும் நிலையான உற்பத்தி அடங்கும். வேளாண் வனவியல் துறையில், **விவசாயி முழுமையான பயிர் தோல்வியின் அபாயத்தைக் குறைக்கிறார்.** சமூக நன்மைகளில் **நிலையான வேலைவாய்ப்பு** மற்றும் **அதிகரித்த வருமானம், சிறந்த ஊட்டச்சத்து** மற்றும் **வேலைக்காக இடம்பெயர்வதைக் குறைத்தல்** ஆகியவற்றிலிருந்து சிறந்த வாழ்க்கைத் தரங்கள் அடங்கும்.

அடுத்த இதழில், வேளாண் காடு வளர்ப்பு முறையில் வளர்க்கக்கூடிய இனங்கள் பற்றி மேலும் விரிவாகப் பார்ப்போம்.

**வயலில் இருந்து கதை - TIST விவசாயி - அம்சா கேசவன், களம் & மேசை தணிக்கை மற்றும் கிளஸ்டர் சேவகர் சி. கார்த்திகேயன் தயாரித்தது.**

நான், **அம்சா கேசவன்**, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வடகரம்பலூர் கிராமத்தில் வசிக்கிறேன். **மரம் நடுதல்** மற்றும் எனது சிறிய முயற்சிகள் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு பங்களிப்பதில் நான் எப்போதும் ஆர்வமாக உள்ளேன். அமைப்பின் கொள்கைகள் மற்றும் சமூகத்தால் வழிநடத்தப்படும் சுற்றுச்சூழல் மேற்பார்வையின் முக்கியத்துவம் என்னை ஆழமாக ஊக்கப்படுத்தியது மற்றும் நான் TIST -ல் (2021IN227) சேர்ந்தேன்.

TIST இன் **பல்லுயிர் வழிகாட்டுதல்களைப்** பின்பற்றி, சுமார் 6,500 **செம்மரம், தேக்கு மற்றும் மஹோகனி** உள்ளிட்ட பல்வேறு **மரக்கன்றுகளை** நட்டேன். **TIST கிளஸ்டர் கூட்டங்களில்** நான் தொடர்ந்து பங்கேற்பதன் மூலம், நில உற்பத்தித்திறனை மேம்படுத்துவது குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றேன். அத்தகைய ஒரு சந்திப்பின் போது, மரங்களுக்கு இடையில் ஊடுபயிராக **மிளகு** கொடிகளையும் வளர்க்கலாம் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. இதன் மூலம் உந்தப்பட்டு, நான் **500 மிளகு கொடிகளை** வாங்கி நட்டேன். தற்போது, மிளகு கொடிகள் சராசரியாக 10 – 12 **அடி** உயரத்தை எட்டியுள்ளன, மேலும் சில காய்க்கத் தொடங்கியுள்ளன. அடுத்த **ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம்** வரை, அனைத்து கொடிகளும் முழு அறுவடையை உற்பத்தி செய்யத் தொடங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த அனுபவத்தின் மூலம், மிளகு போன்ற **நிரந்தர ஊடுபயிர்களுடன்** இணைந்து **நீண்ட கால மர வளர்ப்பு சுற்றுச்சூழல்** மற்றும் **பொருளாதார நிலைத்தன்மையை** உருவாக்கும் என்பதை நான் கற்றுக்கொண்டேன். 60 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட மரங்களை பராமரிக்கும் விவசாயிகளுக்கு, அத்தகைய ஊடுபயிர்களை ஒருங்கிணைப்பது நிலத்தைப் பாதுகாப்பதோடு, காலநிலை நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதும் **நிலையான வருமானத்தை** உறுதி செய்கிறது.

Newsletter November 2025 *Not for Sale*

# CHEZHUMAI

The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST is an Innovative, time-tested, afforestation program led by the farmers

We hope that you gained deeper insights on the GHG agreement in the last few issues of the *Chezhumai* newsletter.

We will now take up an important aspect of tree planting, especially in our circumstances where we need to retain trees for long term for the carbon market, but at the same time we need our supply of food, fodder, etc. from our land. And the answer to this is agroforestry.

**An Introduction to Agroforestry**

The term agroforestry is used for a system where the land is used for raising trees along with crops and/or livestock.

This is more complex than a monoculture as there are both ecological and economical interactions between the various components. Here, there is production of many outputs with emphasis **on growing multiple indigenous trees and shrubs**.

Thus, it is a sustainable land-use system that increases the yield by combining **food crops** (annuals) with **tree crops** (perennials). Moreover, the management practices would suit the social and cultural practices of the people along with the economic and ecological profile of the area.

When we classify agroforestry on functional basis we classify as Productive or Protective Functions - in the former trees are raised for food, fodder, fuelwood, clothing, shelter, minor forest produce while in the later it is more for wind breaks, shelter belts, soil conservation and health.

Our TIST trees must adhere to the concept of agroforestry rather than monocultures or plantation of only few selected timber species.

**Environmental benefits** include efficient recycling of nutrients, reduction of water run-off and soil erosion, improvement of the microclimate, increased soil nutrient due to decomposition of litter. **Economic benefits** include increased and sustainable production of food, fuel wood, fodder, fertilise, timber and income.

**What are TIST Values?**

- We are Honest
- We are Accurate
- We are Transparent
- We are Mutually Accountable
- We are Servants to each other
- We create Big Results with Low Budget

In an agroforestry, the farmer **reduces the risk of complete crop failure**. Social benefits could include better living standards from **sustained employment** and **increased income, better nutrition** and maybe **reduction of migration** for work. In the next issue, we will elaborate more about the species that can be grown in an agroforestry system.

**Story from the Field – TIST Farmer - Amsa Kesavan, Prepared by Karthikeyan, Field & Desk Audit and Cluster Servant**

I, **Amsa Kesavan**, live in Vadakarumbalur village in Tiruvannamalai District. I have always been passionate about **tree planting** and about contributing to ecological stability through my small efforts. The organization's principles and emphasis on community-led environmental stewardship inspired me deeply and I joined TIST (2021IN227).

Following TIST's **biodiversity guidelines**, I planted a diverse mix of trees including **Red Sanders, Teak, and Mahogany**, with a total of about **6,500 saplings**.

Through my regular participation in **TIST Cluster meetings**, I gained valuable insights into improving land productivity. During one such meeting, we were told that we can also grow pepper **vines** as an intercrop among the trees. Motivated by this, I purchased and planted **500 pepper plants**.

At present, the pepper vines have reached an average height of **10–12 feet**, and some have started to bear fruit. We expect that within the next **six months to one year**, all the plants will begin producing a full harvest.

Through this experience, I have learned that **long-term tree cultivation**—when combined with **permanent intercrops** like pepper—can create both **environmental** and **economic stability**. For farmers maintaining trees for 60 years or more, integrating such intercrops ensures a **steady income** while protecting the land and contributing to climate action.





**TO CONTACT CO-DIRECTORS**

E-mail : vijay@tist.org | manjula@tist.org

Mobile : +91 97914 13940 | +91 94883 43569

www.tist.org